2025 – அக்டோபர் மாதம் – 30 ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 169/2023*

*2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் – 30 ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW 4, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | PW4, அசோகன் |
| தந்தையார் பெயர் | : | தங்கவேல் |
| ஊர் | : | சிறுவயலூர் |
| வட்டம் | : | ஆலத்தூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 45 |

<u>தேதி: 30 .10.2025.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் இந்த மனுவில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பில் ம.சா.4 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன்.

<u>2-ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் விபத்தில் காயம்பட்டு இறந்து போன மல்லிகா என்பவருக்கு உறவினர் இல்லை. விபத்து சம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் விபத்து நடைபெற்றவுடன்108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து வரச் சொன்னேன். ஆனால் அவருடன்மருத்துவமனைக்கு செல்லவில்லை. காயம்பட்ட மல்லிகாவுடன் யார் போனார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார்

புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்து நடைபெற்ற இடம் சென்னை- திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்றால்சரிதான். மேற்படி சாலை போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடம் என்றால் சரிதான். நான்கு வழி சாலையை பிரிக்கும் தடுப்பு சுவர் விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி மல்லிகா என்பவர் தேசிய நெடுஞ்சாலையை கடக்கும் பொழுதுதான் விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். நான் விபத்து நடைபெற்ற நாள் அன்று சமயபுரம் கோவிலுக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் அவ்வாறு பார்த்திருந்தால் காயம்பட்ட மல்லிகாவில் உறவினருக்கு நான் தகவல் சொல்லியிருப்பேன் என்றும் மேலும் புகாரில் சம்பவத்தை பார்த்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மல்லிகா சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வரும்பொழுது படுத்த படுக்கையாகத்தான் வந்தார். நான் மல்லிகாவை விபத்திற்கு பின்னர் நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மல்லிகா எங்கள்ஊரை சேர்ந்தவர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**